செ.வெ.எண்.73 நாள்:27.04.2017

பத்திரிக்கை செய்தி ___ திருநெல்வேலி மாவட்டம்

# திருநெல்வேலியில் சமூக பாதுகாப்புத் துறையின் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் தூய்மை பாரதம் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை முதல் கையெழுத்திட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

-------

திருநெல்வேலி பழைய பேருந்து நிலையத்தில் சமூக பாதுகாப்புத்துறையின் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்ட அலகின் சார்பில் தூய்மை பாரதம் விழிப்புணர்வு கையெழுத்து இயக்க நிகழ்ச்சி இன்று (27.04.2017) நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு முதல் கையெழுத்திட்டு தூய்மை பாரதம் - விழிப்புணர்வை தொடங்கி வைத்தார். தொடர்ந்து தூய்மை பாரதம் விழிப்புணர்வு உறுதி மொழி ஏற்ப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உறுதிமொழி ஏற்க்கப்பட்டது.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலியில் சமூக பாதுகாப்புத் துறையின் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட அலகின் சார்பில் தூய்மை பாரத விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் இன்று நடத்தப்படுகிறது. இதை தொடர்ந்து மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்படவுள்ளது. தனிநபர் கழிப்பிடம் கட்ட கிரமப்புரத்தில் ரூ.12000 மும், நகரப்பகுதியில் ரூ.8,000 மும் வழங்கப்படுகிறது. பொதுமக்கள் வீடுகளில் உள்ள கழிப்பிடங்களையும், பொது கழிப்பிடங்களையும் பயன்படுத்த வேண்டும், திறந்த வெளியில் மலம் கழிக்க கூடாது. சாக்கடைகளில் குப்பைகளை கொட்டக் கூடாது. திருநெல்வேலி மாவட்டத்தில் 36 கிராமங்களில் அனைத்து வீடுகளிலும் கழிப்பிடம் அமைக்கப்பட்டு திறந்த வெளி மலம் கழிக்காத தூய்மை கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பல கிராமங்களை அறிவிக்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது. என தெரிவித்தார்.

இந்தநிகழ்ச்சியில் தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட திட்ட இயக்குநர் திரு.சந்திரகுமார், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.தேவ்ஆனந்த், திருநெல்வேலி மாநகராட்சி நகர் நல அலுவலர் மரு.பொற்செல்வன், மாநகராட்சி சுகாதார அலுவலர் முருகேசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.